செ.வெ. எண்: 41 நாள்: 14.01.2012

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**
**இராஜீவ் வீட்டு வசதி திட்டம்**
**செய்திக் குறிப்பு**

நாட்டின் நகரங்களில் உள்ள குடிசைப்பகுதிகளை மேம்படுத்தி வீட்டு வசதி அமைத்து குடிசைப் பகுதிகளற்ற நகரங்களை 2017க்குள் உருவாக்கும் நோக்கத்துடன் மைய அரசால் இராஜீவ் வீட்டு வசதி திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. குழு

இத்திட்டப்பணிகளுக்கான திட்ட அறிக்கைகள் தயாரித்தல், திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்கல், மைய அரசிற்கு திட்ட அறிக்கைகளை பரிந்துரை செய்தல், மற்றும் திட்டப்பணிகளை செயல்படுத்துதல் போன்ற பணிகளுக்காக மாநில அளவிலான வழிநடத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் குழு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களை துணை தலைவராகவும், அரசு செயலர்கள் மற்றும் துறை தலைவர்களை கொண்டு அரசாணை எண்.2, வீ.வ.ம.ந.பு.வ.துறை நாள் 2.1.2012ல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதற்கூட்டம் 13.01.2012 அன்று மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாண்புமிகு வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.ஆர்.வைத்திலிங்கம், அரசு செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

## 3. நிதி ஆதாரம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் இராஜீவ் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 1.00 இலட்சம் வீடுகள் ரூ.7500.00 கோடி செலவில் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரத்தினைக் கொண்டு 2012 முதல் 2017 வரை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அ. மைய அரசின் மான்யம் | – | 50% |
| ஆ. மாநில அரசின் மான்யம் | – | 40% |
| இ. பயனாளிகளின் பங்கு | – | 10% |

## 4. சமூக பொருளாதார கணக்கெடுப்பு

இத்திட்டத்தின் கீழ் மைய அரசின் அறிவுரைகளுக்கிணங்க சென்னை, மதுரை, கோவை, ஈரோடு, திருப்பூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி நகரங்களில் சமூக பொருளாதார கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக 7 நகரங்களில் கணக்கெடுப்பு பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

## 5. முன்னோடி திட்டம்

முதற்கட்டமாக இராஜீவ் வீட்டு வசதி திட்டப்பணிகளுக்கு புதுமையான யுக்திகளை பின்பற்றி முன்னோடி திட்டங்கள் உருவாக்கப்பட்டு அனுப்புமாறு மைய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. அதற்கிணங்க சென்னை மாநகராட்சி வட்ட எண்.96ல் உள்ள கக்கன்ஜி நகரில் குடிநீர் குழாய்களின் மேல் குடிசைகள் அமைத்து தற்போது வாழ்ந்து வரும் குடிசைப்பகுதி குடும்பங்களுக்காக அத்திப்பட்டு பகுதியில் 1404 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.108.43 கோடி செலவில் அமைக்கவும் மைய அரசின் ஒப்புதல் பெறவும். குழு ஒப்புதல் அளித்து மைய அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**